# உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களில் பின்பற்றுவதற்குரிய மாதிரி நன்னடத்தை விதித்தொகுப்பு

---

தமிழ் நாட்டிலுள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் சுதந்திரமாகவும், நியாயமாகவும், ஒழுங்காகவும், அமைதியாகவும் நடத்த வேண்டி, அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் வழிகாட்டுதலுக்காக ஒரு மாதிரி நன்னடத்தை விதித் தொகுப்பை வெளியிடுவது உகந்ததும் அவசியமானதுமாகும். எனவே, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 243-K மற்றும் 243-ZA மற்றும் இதற்குரிய ஏனைய சட்டப்பிரிவுகள்[?] மற்றும் விதிகள்[&] ஆகியவைகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் கீழ்க்கண்ட விதித் தொகுப்பை சம்பந்தப்பட்டவர்கள் ஏற்று அவற்றைப் பின்பற்ற வெளியிடுகின்றது.

1. உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களில் பின்பற்றுவதற்குரிய மாதிரி நன்னடத்தை விதித் தொகுப்பு என இதைக் கூறலாம்.

2. மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் சாதாரணத் தேர்தல்களுக்கான அறிவிக்கை வெளியிடப்பட்டு தேர்தல் நடைபெறும் நிகழ்வில் மாதிரி நன்னடத்தை விதித் தொகுப்பு மாநிலம் முழுமைக்கும் பொருந்தும்.

3. மாநிலம் முழுமைக்குமான சாதாரணத் தேர்தல்களல்லாமல் உள்ளாட்சி அமைப்புகளில் எழும் ஒரு சில காலியிடங்களுக்கான தற்செயல் தேர்தல்கள் நடைபெறும் நிகழ்வில், மாதிரி நன்னடத்தை விதிகளை செயலாக்கப்படுத்துவதற்கான பகுதி நிர்ணயம் (Area of applicability) பின்வருமாறு வரையறுக்கப்படுகிறது.

---

? *தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 239 எல்லா நிலை ஊராட்சிகளுக்கும் ;*
*தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920-ன் பிரிவு 43-B எல்லா நகராட்சிகளுக்கும் மூன்றாம் நிலை நகராட்சிகளுக்கும் மற்றும் பேரூராட்சிகளுக்கும் ;*
*சென்னை மாநகராட்சி சட்டம் 1919 பிரிவு 6-I சென்னை மாநகராட்சிக்கும் ;*
*மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 10-D மதுரை மாநகராட்சிக்கும் ;*
*கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 பிரிவு 10-D கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் திருநெல்வேலி, திருப்பூர், ஈரோடு, தூத்துக்குடி மற்றும் வேலூர் மாநகராட்சிகளுக்கும்.*

& *தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதிகள் 1995 எல்லா நிலை ஊராட்சிகளுக்கும் ;*
*தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (தேர்தல்கள்) விதிகள், 2006 பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் ஆகியவற்றிற்கும்.*

**அ) ஊரக உள்ளாட்சித் தேர்தல்கள்**

| | | |
|---|---|---|
| மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் | - | தொடர்புடைய மாவட்ட ஊராட்சி வார்டின் கீழ் அடங்கும் அனைத்து ஊராட்சி ஒன்றியப் பகுதி முழுமைக்கும் பொருந்தும். |
| ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் | - | தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய பகுதி முழுமைக்கும் பொருந்தும். |
| சிற்றூராட்சித் தலைவர் மற்றும் சிற்றூராட்சி வார்டு உறுப்பினர் | - | தொடர்புடைய சிற்றூராட்சிப் பகுதி முழுமைக்கும் பொருந்தும் |

**ஆ) நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்கள்**

| | | |
|---|---|---|
| நகராட்சித் தலைவர் / மூன்றாம் நிலை நகராட்சித் தலைவர் / பேரூராட்சித் தலைவர் | - | தொடர்புடைய நகர்ப்புற உள்ளாட்சிப் பகுதி முழுமைக்கும் பொருந்தும். |
| நகராட்சி / மூன்றாம் நிலை நகராட்சி / பேரூராட்சி வார்டு உறுப்பினர் | - | தொடர்புடைய நகர்ப்புற உள்ளாட்சிப் பகுதி முழுமைக்கும் பொருந்தும். |
| மாநகராட்சி மேயர் | - | தொடர்புடைய மாநகராட்சி பகுதி முழுமைக்கும் பொருந்தும். |
| மாநகராட்சி வார்டு உறுப்பினர் | - | தொடர்புடைய வார்டு அடங்கியிருக்கும் மண்டலம் (Zone) முழுமைக்கும் பொருந்தும். |

4. இந்தத் தொகுப்பு தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் தேர்தல் அறிவிக்கும் நாளிலிருந்து (Date of announcement of election by State Election Commission) அனைத்து தேர்தல்களையும் நடத்தி முடிக்கும் வரை அமுலில் இருக்கும்.

5. இந்தத் தொகுப்பில் உள்ள வாசகங்கள் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புக்கும் உரிய தமிழ்நாடு சட்டங்கள் மற்றும் விதிகள், அவற்றின் கீழ் பிறப்பிக்கப்பட்ட சட்ட ரீதியான ஆணைகள் ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள வாசகங்களுக்கான அதே பொருளைக் கொண்டதாக இருக்கும்.

## I. பொது நடத்தை:

6. எந்த அரசியல் கட்சியோ அல்லது வேட்பாளரோ அல்லது அவரது முகவரோ வெவ்வேறு சாதியினர், சமூகத்தினர், மதத்தினர் அல்லது பல்வேறு மொழி பேசும் இனத்தினர் ஆகியோரிடையே வேற்றுமைகளை ஏற்படுத்தவோ அல்லது அவ்வேற்றுமைகளை மேலும் அதிகப்படுத்தவோ அல்லது மனக்கசப்பை உண்டாக்கவோ அல்லது மேலும் அதிகப்படுத்தவோ, அல்லது கொந்தளிப்பை ஏற்படுத்தும் காரியங்களில் ஈடுபடவோ கூடாது.

7. வாக்குகளைப் பெறுவதற்கென சாதி, மத, இன உணர்வுகளைத் தூண்டும் வகையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்த வேண்டுகோளையும் விடுக்கக்கூடாது.

8. வழிபாட்டுத் தலங்களாகிய கோவில்கள், மசூதிகள் மற்றும் மாதா கோயில்கள் ஆகியவற்றைத் தேர்தல் பிரச்சாரத்திற்கான இடங்களாகப் பயன்படுத்தக் கூடாது.

9. ஒரு கட்சி மற்ற கட்சிகளைப் பற்றி விமர்சிக்கும் பொழுது, அவர்களுடைய கொள்கைகள், கோட்பாடுகள், கடந்த கால சாதனைகள், பணிகள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றைப் பற்றி மட்டுமே விமர்சனம் செய்வதாக இருக்க வேண்டுமே தவிர, வெறும் குற்றச்சாட்டுகளைச் சார்ந்ததாக இருத்தல் கூடாது. மாற்றுக் கட்சியின் தலைவர்கள் அல்லது தொண்டர்களை விமர்சிக்கும் போது, அவர் தம் பொது வாழ்க்கை மற்றும் நடவடிக்கைகளுக்குச் சம்பந்தமில்லாத அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையின் எந்த ஒரு கூற்றையும் விமர்சிப்பதை கட்சிகளும், வேட்பாளர்களும் தவிர்க்க வேண்டும்.

10. ஒவ்வொரு தனிநபரின் உரிமையான, அமைதியான தொல்லையற்ற இல்வாழ்வுக்கு மதிப்பளித்திடல் வேண்டும். அவர் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவராகவும் அல்லது வேட்பாளராக இருந்தாலும் அவரது அரசியல் கருத்துக்களிலோ அல்லது நடவடிக்கைகளிலோ தலையிடுதல் கூடாது. தனிநபர் ஒருவருடைய அரசியல் கருத்துக்களுக்கு அல்லது நடவடிக்கைகளுக்கு மறுப்பு தெரிவித்து அவர்களுடைய வீடுகளுக்கு முன்பு கிளர்ச்சிகள் அல்லது மறியல்களை எந்த சந்தர்ப்பத்திலும் நடத்தக்கூடாது.

11. எந்த ஒரு சட்டத்தின் கீழும், குறிப்பாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளுக்குரிய சட்டத்தின் கீழ் “ஊழல்கள்“, “குற்றங்கள்“ என அமைகிற எந்த செயல்களிலும் அனைத்துக்

கட்சிகளும் வேட்பாளர்களும் கண்டிப்பாக ஈடுபடுதல் கூடாது. ஊழல்கள் எனப்படும் அத்தகைய செயல்களில் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(i) லஞ்சமோ அல்லது வெகுமதியோ வாக்காளருக்கு கொடுத்தல் ;

(ii) நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, வாக்காளர் அல்லது அவரது ஆதரவாளரை இக்கட்டுக்கு உள்ளாக்கி, அச்சுறுத்தி, தவறான வகையில் தன்வயப்படுத்தி அவர் சுதந்திரமாக வாக்களிக்கும் உரிமையில் குறுக்கிடுதல்.

உதாரணமாக, ஒரு வேட்பாளரையோ, ஒரு வாக்காளரையோ அல்லது ஒரு வேட்பாளருக்கு அல்லது வாக்காளருக்கு வேண்டப்பட்ட ஒருவரையோ "சாதி மற்றும் சமூகத்திலிருந்து விலக்கி வைக்கப்படுவாய்" அல்லது "தெய்வ குற்றத்திற்கு ஆளாவாய்" என்று அச்சுறுத்தும் அல்லது தூண்டும் செயல்கள், சுதந்திரமாக வாக்களிக்கும் ஒருவரின் உரிமையில் குறுக்கிடுதல் ஆகும்.

(iii) சாதி, மத மற்றும் இன அடிப்படையில் வாக்குக் கோரியோ அல்லது வாக்களிக்கக் கூடாது என்றோ வேண்டுகோள் விடுத்தல், மற்றும் மதச் சின்னம், தேசியக்கொடி, தேசிய சின்னம் போன்றவற்றை தேர்தல் காரணத்திற்காக ஒருவர் பயன்படுத்துதல் ;

(iv) ஒரு வேட்பாளரின் வெற்றி வாய்ப்பைப் பாதிக்கும் வகையில் அவரது தனிப்பட்ட நடத்தை மற்றும் பண்பை பற்றி உண்மைக்குப் புறம்பான அல்லது தவறான ஒரு செய்தியை வெளியிடுதல் ;

(v) வாக்காளர்கள் வாக்குச் சாவடிக்குச் சென்றுவர போக்குவரத்து வசதி செய்து கொடுத்தல் ;

(vi) தாங்கள் கூட்டுகின்ற கூட்டங்களில் மதுபானங்களை மற்றும் தடைசெய்யப்பட்ட போதைப் பொருட்களை வழங்குதல்,

(vii) அச்சடிப்பவர் மற்றும் வெளியீட்டாளரின் பெயர் மற்றும் முகவரி இல்லாமல் சுவரொட்டி, துண்டு பிரசுரங்கள், சுற்றறிக்கைகள் அல்லது விளம்பரங்கள் ஆகியவற்றை அச்சடித்து வெளியிடுதல்;

(viii) தேர்தல் தினம் மற்றும் வாக்குப்பதிவு முடிவுற நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்திலிருந்து முந்தைய 48 மணி நேரத்தில் கூட்டங்கள் அல்லது ஊர்வலங்கள் நடத்துதல்;

(ix) வாக்குச்சாவடியிலிருந்து 200 மீட்டர் தொலைவுக்குள் வாக்கு சேகரித்தல் மற்றும் வாக்காளருடைய ஆதரவைக் கோரி தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுதல் ;

(x) வாக்குச் சாவடியின் உள்ளோ அல்லது வாக்குச்சாவடியின் அருகிலோ அத்துமீறி நடத்தல் அல்லது தேர்தல் பணியாளரை பணியைச் செய்யவிடாமல் தடுத்தல் மற்றும் இடையூறு செய்தல் ;

(xi) ஆள்மாறாட்டம் செய்தல் அல்லது தவறான பெயரில் வாக்களித்தல்.

12. அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் எவரும் அவர்களுடைய தொண்டர்களை எந்த ஒரு தனிநபருடைய நிலம், கட்டிடம், மதில் சுவர் முதலியவற்றை கொடிக் கம்பங்கள் நடுதல், கட்-அவுட்டுகள் கட்டுதல், சுவரொட்டிகள் ஒட்டுதல், கோஷங்கள் எழுதுதல், தட்டிகள் தொங்கவிடுதல் முதலியவற்றிற்காக சம்மந்தப்பட்டவர்களின் அனுமதியின்றி பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது. அத்தகைய அனுமதி பெற்றிருப்பின் அதன் நகலை மாவட்டத் தேர்தல் அலுவலருக்கும், மாநகராட்சிகளைப் பொறுத்தமட்டில் தேர்தல் நடத்தும் அலுவலருக்கும் உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும்.

13. ஒரு அரசியல் கட்சியின் கொடியையோ அல்லது அக்கட்சி ஒட்டுகிற சுவரொட்டிகளையோ மற்றொரு வேட்பாளரோ அவரது தொண்டர்களோ அகற்றவோ, கிழிக்கவோ கூடாது.

14. அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் தமது ஆதரவாளர்கள் பிறகட்சிகள் ஏற்பாடு செய்கின்ற கூட்டங்களில் இடையூறு விளைவிக்கவோ அல்லது ஊர்வலங்களைக் கலைக்கவோ கூடாதென்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்த தொண்டர்களோ, ஆதரவாளர்களோ மற்றொரு கட்சி ஏற்பாடு செய்துள்ள பொதுக் கூட்டங்களில் வாய்மொழியாகவோ எழுத்து மூலமாகவோ வினாக்கள் விடுப்பதன் மூலம் அல்லது தங்களுடைய கட்சியின் துண்டு பிரசுரங்களை விநியோகிப்பதன் மூலம் அக்கூட்டங்களில் குழப்பங்களை விளைவிக்கக் கூடாது. ஒரு கட்சியின் கூட்டம் நடைபெற்று வருகிற இடத்தின் வழியாக மற்றொரு கட்சி ஊர்வலம் நடத்தக் கூடாது. ஒரு அரசியல் கட்சி ஒட்டுகிற சுவரொட்டிகளை மற்றோர் அரசியல் கட்சி அகற்றக் கூடாது.

15. உரிய அலுவலரின் அனுமதி பெறாமல் எந்தக் கட்சியோ வேட்பாளரோ ஒலிபெருக்கியை பயன்படுத்துதல் கூடாது. நேரடியான அல்லது பதிவு செய்யப்பட்ட உரைகளைத் தவிர ஏனையவற்றை ஒலிபரப்புவதற்கு ஒலிபெருக்கியைப் பயன்படுத்தக்கூடாது. இசை மற்றும் பாடல்களை ஒலிபரப்புவதற்கு ஒலிபெருக்கியை பயன்படுத்துதல் கூடாது. வாகனங்களில் பொருத்தப்பட்ட ஒலிபெருக்கிகள் உட்பட எல்லா ஒலிபெருக்கிகளையும் தேர்தல் பிரச்சாரத்திற்காக காலை 6.00 மணியில் இருந்து நகர்ப்புறம் மற்றும் ஊரக உள்ளாட்சிப் பகுதிகளில் இரவு 10.00 மணி வரை மட்டுமே பயன்படுத்தலாம். இந்த நிபந்தனையை மீறுவோரிடமிருந்து அவர்கள் பயன்படுத்தும் சாதனங்களை பறிமுதல் செய்ய காவல் துறையினருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

16. தேர்தலில் போட்டியிடும் எந்த ஒரு வேட்பாளரும் 1995-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதிகள், மற்றும் 2006ஆம் ஆண்டு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (தேர்தல்கள்) விதிகளில் குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேலாகத் தேர்தலுக்காக செலவிடக் கூடாது.

17. போட்டியிடும் வேட்பாளர் அன்றாட தேர்தல் செலவுக்கான கணக்குகளை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து வைத்திருக்க வேண்டும். வேட்பு மனு ஏற்றுக் கொள்ளப்படும் தினத்தன்று மேற்படி படிவங்கள் இலவசமாக வழங்கப்படும்.

18. போட்டியிடும் வேட்பாளர் ஒவ்வொருவரும் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 30 (முப்பது) நாட்களுக்குள் தேர்தல் செலவினங்களுக்கான கணக்கினை தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து அதன் நகலை அவ்வாணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ள அலுவலரிடம் தாக்கல் செய்ய வேண்டும்; மற்றும்

19. தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் நாள் வரை அரசாங்கம், உள்ளாட்சி அமைப்புகள், பொதுத்துறை நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் ஏனைய அரசு மானியம் பெறும் நிறுவனங்கள் ஆகியவற்றுக்குச் சொந்தமான வாகனங்களை எந்த ஒரு அமைச்சரோ, பாராளுமன்ற உறுப்பினரோ, சட்டப்பேரவை உறுப்பினரோ, உள்ளாட்சி பிரதிநிதியோ, வேட்பாளரோ அல்லது அவரைச் சார்ந்த வேறு எவருமோ தேர்தலில் வாக்கு கேட்கும் பொருட்டு பயன்படுத்தக் கூடாது.

## II. கூட்டங்கள் :

20. போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், அமைதி, ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும் அவசியமான நடவடிக்கைகளைக் காவல் துறையினர் எடுத்துக் கொள்வதற்காக, அரசியல் கட்சி அல்லது வேட்பாளர், தான் நடத்த உத்தேசித்துள்ள கூட்டத்திற்கான இடம், நேரம் ஆகியவை குறித்து உரிய காலத்திற்கு முன்னதாகவே உள்ளூர் காவல் துறை அல்லது ஏனைய சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும்.

21. ஓர் அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் கூட்டம் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட இடத்தில் ஏதேனும் கட்டுப்பாடுகள் அல்லது தடை உத்தரவுகள் செயலிலுள்ளனவா என்பது பற்றி முன்னதாகவே விசாரித்தறிய வேண்டும் அத்தகைய ஆணைகள் செயலிலிருந்தால் அவற்றை அவர்கள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும். அத்தகைய ஆணையிலிருந்து விலக்கு எதுவும் தேவைப்பட்டால், அதற்கென குறிப்பாக விண்ணப்பம் செய்து கொண்டு உரிய காலத்துக்கு முன்னதாகவே ஆணை பெற்றுக் கொள்ள வேண்டும்.

22. நடைபெறவுள்ள கூட்டத்திற்காக ஒலிபெருக்கிகள் அல்லது வேறு பிற வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வதற்காக அனுமதி அல்லது உரிமம் பெறுவதாக இருந்தால், கட்சி அல்லது வேட்பாளர், உரிய அலுவலருக்கு முன் கூட்டியே விண்ணப்பம் செய்து கொண்டு அத்தகைய அனுமதி அல்லது உரிமத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

23. ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்பவர்கள், கூட்டத்தில் தொல்லை கொடுக்கிற நபர்களை அல்லது வேறு வகையில் அமைதிக்குப் பங்கம் விளைவிக்க முயற்சிப்பவர்களை சமாளிக்க எப்போதும் காவல் துறையினரின் உதவியை நாடுதல் வேண்டும். கூட்டத்திற்கு ஏற்பாடு செய்பவர்கள் கூட்டத்தில் தொல்லை கொடுக்கின்ற நபர்களின் மீது தாங்களாகவே நேரடியாக நடவடிக்கை எதுவும் எடுக்கக்கூடாது.

24. ஒரு பொது இடத்தில் தேர்தல் கூட்டம் நடத்த அனுமதி வழங்குகையில் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடையே பாரபட்சம் காட்டுதல் கூடாது. ஒரே இடத்தில், ஒரே நாளில், ஒரே நேரத்தில் கூட்டம் நடத்த ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளரோ அரசியல் கட்சியோ அனுமதி கோரும் பொழுது முதலில் விண்ணப்பித்தவர்களுக்கு அனுமதி அளிக்க வேண்டும். காவல் துறையினரால் ஒதுக்கப்பட்ட இடங்களில் தான் அவர்கள் கூட்டங்களை நடத்த வேண்டும்.

25. சாதாரணமாகத் தேர்தல் காலங்களில் நடத்தப்படும் அனைத்துக் கூட்டங்களும் தேர்தல் கூட்டங்களாகவே கருதப்படும் அவற்றிற்காக அரசு பணம் எதுவும் செலவிடப்படுதல் கூடாது. சட்டம் ஒழுங்கை பராமரிப்பதற்கும், பாதுகாப்புக்கென அமர்த்தப்பட்ட அரசு ஊழியர்களைத் தவிர ஏனைய அரசு ஊழியர்கள் அத்தகைய கூட்டங்களில் பங்கேற்பது கூடாது.

26. எந்த ஒரு கட்சியின் வேட்பாளரும் உரிய உள்ளூர் அலுவலரின் அனுமதியின்றி பொதுக் கூட்டங்களையோ அல்லது ஊர்வலங்களையோ நடத்துதல் கூடாது.

## III. ஊர்வலங்கள் :

27. ஊர்வலம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்கிற ஒரு கட்சி அல்லது வேட்பாளர் ஊர்வலம் தொடங்கவிருக்கும் நேரம், காலம், இடம், ஊர்வலம் செல்லவிருக்கிற வழித்தடம், ஊர்வலம் முடிவடைகின்ற நேரம், இடம் ஆகியவை குறித்து முடிவு செய்து கொண்டு அதற்கான அனுமதியை உரிய அலுவலரிடம் முன்னதாகவே பெற வேண்டும். இவ்வாறு முடிவு செய்யப்பட்ட திட்டத்தை சாதாரணமாக மாற்றக் கூடாது.

28. ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்பவர்கள் தங்களுடைய ஊர்வலத் திட்டம் குறித்துக் காவல் துறையினருக்கு முன்னதாகவே தகவல் கொடுக்க வேண்டும். அப்போதுதான் காவல் துறையினர் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய முடியும்.

29. ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்பவர்கள், ஊர்வலம் செல்கிற வழிகளில் கட்டுப்பாட்டு ஆணைகள் எதுவும் அமுலில் இருந்தால், அவற்றிற்கு உட்பட்டு நடந்து கொள்ள வேண்டும். அக்கட்டுப்பாட்டு ஆணைகள் தக்கவர்களால் விலக்களிக்கப்பட்டிருந்தால், பின்பற்றப்பட வேண்டியதில்லை. நடைமுறையிலுள்ள போக்குவரத்து விதிமுறைகள் அல்லது கட்டுப்பாடுகளையும் அவர்கள் கவனமுடன் பின்பற்ற வேண்டும்.

30. ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்பவர்கள், போக்குவரத்திற்குத் தடை அல்லது இடையூறு ஏற்படாத வகையில் ஊர்வலம் தடையின்றிச் செல்வதற்குரிய ஏற்பாடுகளுக்கு முன்கூட்டியே நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். ஊர்வலம் மிகவும் நீண்டதாக இருந்தால் ஊர்வலத்தை பகுதி பகுதியாக நடத்திச் செல்ல வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் வசதியான இடைவெளிகளில் அதிலும் குறிப்பாக ஊர்வலம் சாலைச் சந்திப்புகளைக் கடந்து செல்கின்ற இடங்களில், ஊர்வலம் வருவதைக் கருதி, நிறுத்தி வைக்கப்பட்டுள்ள போக்குவரத்து வண்டிகளைப் பகுதி பகுதியாகப் போகவிட முடியும். அதன்மூலம் போக்குவரத்து நிறுத்தப்படுவதையும் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதையும் தவிர்க்க முடியும்.

31. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்கள், ஒரே வழித்தடத்தில் அல்லது அதன் பகுதிகளில் ஒரே சமயத்தில் ஊர்வலம் நடத்திச் செல்லக் கருதினால், ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்பவர்கள், முன்னதாகவே தங்களுக்குள் தொடர்பு கொண்டு ஊர்வலத்தில் மோதல் ஏற்படாதவாறு அல்லது போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். உரிய ஏற்பாடுகளைத் திருப்திகரமாகச் செய்வதற்கு உள்ளூர் காவல் துறையினரின் உதவியை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்கென அரசியல் கட்சிகள் முடிந்த வரை முன்னதாகவே காவல் துறையினருடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

32. ஊர்வலத்தினர் தட்டிகள், கொடிக் கம்பங்கள் போன்ற பொருள்களை எடுத்துச் செல்லும் போது முக்கியமாக அவர்கள் உணர்ச்சி வசப்படும் நேரங்களில் அப்பொருள்களைத் தவறான வழிகளில் பயன்படுத்தாதபடி ஊர்வலத்தில் செல்லும் அரசியல் கட்சிகளோ வேட்பாளர்களோ அதிகபட்ச கட்டுப்பாட்டையும் தன்னடக்கத்தையும் மேற்கொள்ள வேண்டும்.

33. பிற அரசியல் கட்சியினரை அல்லது அவர்களுடைய தலைவர்களைக் குறிக்கிற கொடும்பாவிகளை இழுத்துச் சென்று, பொது இடத்தில் அத்தகைய கொடும்பாவிகளை எரித்தலையும், இதுபோன்ற ஏனைய நடவடிக்கைகளில் ஈடுபடுதலையும் எந்தவொரு அரசியல் கட்சியும் அல்லது வேட்பாளரும் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

## IV. வாக்குப் பதிவு நாள் :

34. ஒவ்வொரு வேட்பாளரும் மற்றும் ஒவ்வொரு அரசியல் கட்சியினரும் அமைதியாகவும், ஒழுங்காகவும், வாக்குப் பதிவு நடைபெறுவதற்கும், தொல்லை அல்லது தடை எதுவும் இல்லாமல் வாக்களிக்கும் உரிமையை வாக்காளர்கள் தன்னிச்சையாக செய்யும் வகையிலும், தேர்தல் பணியில் ஈடுபடுகின்ற அலுவலர்களுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும். இது தொடர்பான கோட்பாடுகள் சில கீழே கூறப்பட்டுள்ளன.

(i) வாக்குப் பதிவு நாளன்றும், அதற்கு முந்தைய இருபத்து நான்கு மணி நேரத்திலும் மது அல்லது தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களை வழங்குவதோ அல்லது விநியோகிப்பதோ கூடாது.

(ii) வாக்குச்சாவடியிலிருந்து 200 மீட்டர் தொலைவிற்குள் எந்த அரசியல் கட்சியும் தங்களது தேர்தல் முகாம்கள் எதையும் அமைக்கக் கூடாது. ஒரே கட்டிடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குச்சாவடிகள் இருந்தாலும் அவ்வாக்குச் சாவடிகளுக்குப் பொதுவாக, வேட்பாளரின் ஒரே ஒரு தேர்தல் முகாம் மட்டுமே அவ்வாக்குச் சாவடிகளிலிருந்து 200 மீட்டர் தூரத்துக்கு அப்பால் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(iii) வாக்குச் சாவடிகளுக்கு அருகில், அரசியல் கட்சிகள் வேட்பாளர்கள் அமைக்கின்ற முகாம்களுக்கு அருகே, தேவையில்லாமல் கும்பல் கூடுவதை தவிர்க்க வேண்டும். அப்போது தான், பிற கட்சிகள், வேட்பாளர்கள், தொண்டர்கள், அனுதாபிகளிடையே ஏற்படும் மோதலையும், பதட்ட நிலையையும் தவிர்க்க இயலும்.

(iv) வேட்பாளர்களுடைய முகாம்கள் எளிய வகையில் அமைவதை உறுதி செய்யும் வண்ணம் அவர்கள், அங்கு சுவரொட்டிகள், கொடிகள், சின்னங்கள் அல்லது வேறு பிற பிரச்சாரப் பொருட்கள் எவற்றையும் அதிகமாகக் காட்டி பெரிதுபடுத்தக் கூடாது. முகாம்களில் தின்பண்டங்களை விநியோகிக்கக் கூடாது. கூட்டம் கூட அனுமதிக்கக் கூடாது.

(v) வாக்காளர்களுக்கு அரசியல் கட்சியினர் வழங்கும் அடையாளச் சீட்டுகள் வெற்று வெள்ளைத் தாள்களில் இருக்க வேண்டும். மேலும் அத்தாள்களில் சின்னமோ வேட்பாளரின் பெயரோ அல்லது கட்சியின் பெயரோ எதுவும் இருக்கக் கூடாது. வாக்காளரின் பெயர் அவரது தகப்பனார்/கணவரின் பெயர், வார்டு எண், வாக்குச்சாவடியின் எண், வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளரின் வரிசை எண் ஆகியவை மட்டுமே அதில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

(vi) வாக்குப் பதிவு நாளன்று வாகனங்கள்/ஊர்திகள் பயன்படுத்துவது பற்றி விதிக்கப்படுகிற கட்டுப்பாடுகளைப் பின்பற்றுவதிலும் அவற்றிற்கு அனுமதிச் சீட்டுகளைப் பெறுவதிலும் அலுவலர்களுடன் ஒத்துழைக்க வேண்டும், அவற்றை வண்டிகளில் தெளிவாகத் தெரியும்படி ஒட்டி வைக்க வேண்டும்.

## V. வாக்குச்சாவடி :

35. வாக்குச் சாவடியிலிருந்து 200 மீட்டர் தொலைவிற்குள் தேர்தல் ஆதரவு கோருவது, தேர்தல் பிரசாரம் செய்வது ஆகியவை சட்டப்படியான குற்றங்களாகும். இக்குற்றத்தில் ஈடுபடும் நபரை பிடியாணையின்றி கைது செய்து தொடர்புடைய சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கு தொடரலாம்.

36. தேர்தல் நடத்தும் அலுவலரியிடமிருந்து உரிய அனுமதிச் சீட்டு பெறாமல் எந்த நபரும் வாக்குச் சாவடிக்குள் நுழைதல் கூடாது.

37. எந்த நபரும் (அ) வாக்குச்சாவடியின் உள்ளேயோ அல்லது நுழைவு வாயிலிலோ, அருகாமையிலுள்ள பொது அல்லது தனியரது இடங்களிலோ ஒலிபெருக்கியையோ, குரல் பெருக்கியையோ பயன்படுத்துதல் கூடாது. (ஆ) தேர்தல் பணியாளரை பணி செய்யவிடாமல் தடுக்கும் விதத்தில் வாக்குச்சாவடிக்கு உள்ளேயோ அல்லது அருகிலோ தகாத முறையில் நடப்பது கூடாது.

38. வாக்குச் சாவடியின் தலைமைத் தேர்தல் அலுவலரின் சட்ட ரீதியான உத்தரவுக்கு கீழ்ப்படிய மறுக்கும் நபர், காவலர் மூலமாக வெளியேற்றப்படுவார்.

39. வாக்குச் சாவடியிலிருந்து வாக்குச் சீட்டை திருட்டுத்தனமாக எடுத்து செல்பவரோ அல்லது எடுத்துச் செல்ல முயற்சிப்பவரோ தண்டிக்கப்படுவார்.

## VI. அரசு இயந்திரத்தை தவறாகப் பயன்படுத்துதல் :

40. அரசு ஊழியர் தேர்தல் காலங்களில் முற்றிலும் பாரபட்சமின்றி செயல்பட வேண்டும். போட்டியிடும் எந்த ஒரு வேட்பாளருக்கோ அல்லது எந்த ஒரு அரசியல் கட்சிக்கோ ஆதரவாக தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுதல் கூடாது. அவ்வாறு எந்த அரசு ஊழியராவது போட்டியிடும் ஏதாவதொரு வேட்பாளருக்கு ஆதரவாக ஈடுபடுவதாகத் தெரிந்தால் அவர் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அதைத் தேர்தல் நடத்தும் அலுவலரின் கவனத்திற்கு கொண்டு செல்லலாம்.

41. அமைச்சர் ஒருவர் தனது தேர்தல் பிரச்சாரப் பயணத்தின் போது தனி நபரது வீட்டில் நடத்தப்படும் நிகழ்ச்சிக்கு அவரது அழைப்பின் பேரில் அவர் வீட்டிற்கு செல்லும் போது, அவ்வமைச்சருடன் அரசு ஊழியர் செல்வதோ அந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வதோ கூடாது.

## VII. ஆளுங்கட்சி :

42. மத்தியில் அல்லது மாநிலத்தில் ஆட்சிப் பொறுப்பிலுள்ள கட்சி தனது தேர்தல் பிரச்சாரத்திற்காக பதவியை பயன்படுத்தியுள்ளது என்னும் புகார் வருவதற்கு இடமளிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக :

(i) (அ) அமைச்சர்கள் தமது அலுவல் பயணத்தையும் தேர்தல் பணியையும் ஒன்றாக இணைத்துச் செயல்படக்கூடாது. மேலும், தேர்தல் பணிக்காக அரசு இயந்திரத்தையோ அல்லது அரசுப் பணியாளர்களையோ பயன்படுத்திக் கொள்ளக் கூடாது.

(ஆ) அமைச்சர் ஒருவர் மாவட்டத்தில் தேர்தல் நடக்கும் ஒரு பகுதிக்கு பயணம் மேற்கொள்வாராயின் அப்பயணம் தேர்தல் நிமித்தப் பயணமாகவே கருதப்படும். பாதுகாப்பு அதிகாரிகள் தவிர்த்து வேறு எந்த அரசு பணியாளரும் அமைச்சருடன் செல்லுதல் கூடாது. இத்தகைய பயணங்களில் அரசு வாகனங்களை பயன்படுத்தவும், அரசுச் சலுகைகளை அனுபவிக்கவும் அனுமதி இல்லை.

(இ) அரசாங்க விமானம், வண்டிகள் உட்பட அரசுப் போக்குவரத்தும், அரசு அலுவலர்களும், பணியாளர்களும் ஆளும் கட்சியின் நலனுக்காகப் பயன்படுத்தக் கூடாது.

(ii) மைதானங்கள் முதலிய பொது இடங்களை தேர்தல் கூட்டம் நடத்துவதற்காக மற்றும் வான் ஊர்திகளை நிறுத்துவதற்காக (helipad) ஆளும் கட்சி, ஏகபோக உரிமையுடன் பயன்படுத்தக் கூடாது. ஆளுங்கட்சி எந்த வரையறைகள், நிபந்தனைகளின் பேரில் பொது இடங்களைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளதோ அதே வரையறைகள், நிபந்தனைகளின் பேரில் பிற கட்சிகளும் வேட்பாளர்களும் அப்பொது இடங்களைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்.

(iii) ஓய்வில்லங்கள், பயணியர் மாளிகைகள் அல்லது ஏனைய அரசு குடியிருப்பை ஆட்சியிலிருக்கும் கட்சியினர் அல்லது அக்கட்சியின் வேட்பாளர்கள் மட்டுமே பயன்படுத்தக் கூடாது. அவற்றை ஏனைய கட்சியினரும் வேட்பாளர்களும் நியாயமான முறையில் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்க வேண்டும். ஆனால் கட்சி அல்லது வேட்பாளர் எவரும் அவற்றை (வளாகம் உட்பட) தேர்தல் பரப்புரையை முன்னிட்டு பரப்புரை அலுவலகமாகப் பயன்படுத்தவோ அல்லது யாதொரு பொது கூட்டத்தை நடத்தவோ கூடாது.

(iv) தேர்தல் நேரத்தில் செய்தித் தாள்களிலும், ஏனைய மக்கள் தொடர்பு அமைப்புகள் மூலமும், அரசுச் செலவில் விளம்பரங்கள் வெளியிடுதல், செய்தித் தாள்கள் மற்றும் ஏனைய மக்கள் தொடர்பு அமைப்புகளை ஆளுங்கட்சிக்கு சாதகமாக பயன்படுத்துதல், அரசின் சாதனைகளை ஆளுங்கட்சியின் செல்வாக்கினை மேம்படுத்தும் நோக்குடன் விளம்பரப்படுத்துதல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

(v) தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தால் தேர்தல் அறிவித்த நாள் முதல் ஆளுங்கட்சிக்குச் சாதகமாக வாக்காளர்களைத் தூண்டும் வகையில் அமைச்சர்களும் பிற அதிகாரிகளும் -

(அ) புதுத்திட்டம் எதனையும் அறிவிக்கக் கூடாது.

(ஆ) ஏதேனும் ஒரு வகையில் மானியங்களை ஒப்பளிக்கவோ அல்லது அறிவிக்கவோ அது தொடர்பாக வாக்குறுதிகள் கொடுக்கவோ கூடாது.

(இ) எத்தகையத் திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டுதல் கூடாது.

(ஈ) சாலைகள் அமைப்பது, குடிநீர் வசதிகள் செய்து தருவது போன்றவை பற்றி வாக்குறுதி கொடுக்கக் கூடாது.

(உ) அரசுப் பணியில், அரசு நிறுவனங்கள் முதலியவற்றின் தனிப்பட்ட நியமனம் எதனையும் செய்யக் கூடாது.

(vi) மத்திய அல்லது மாநில அமைச்சர்கள் வாக்குச்சாவடிக்குள் அல்லது வாக்குச்சீட்டு எண்ணுமிடத்திற்குள் நுழையக் கூடாது வேட்பாளர் அல்லது அனுமதி பெற்ற தேர்தல் முகவர் என்கிற முறையில் தான் அவ்வாறு நுழையலாம். வாக்காளர் என்ற முறையில் குறிப்பிட்ட வாக்குச் சாவடிக்குள் சென்றிடலாம்.

## VIII. ஒப்பந்தப்புள்ளிகள் (Opening of Tender) :

43. உலக அளவிலான ஒப்பந்தப்புள்ளிகள் நீங்கலாக (Global Tenders) இதர ஒப்பந்தப்புள்ளிகள் தேர்தலுக்கு முன்னதாக ஏற்கனவே கோரப்பட்டிருந்தால் அவற்றை மதிப்பீடு மட்டும் செய்யலாம். தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தில் ஒப்புதல் இன்றி ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்தல் கூடாது. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதி / ஒப்புதலின்றி, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுதல் கூடாது.

## IX. திட்டங்கள் மற்றும் பணிகள் :

44. மாதிரி நன்னடத்தை விதிகள் நடைமுறையில் இருக்கும்பொழுது பின்வருவன தடை செய்யப்படுகின்றன.

(i) பதவியில் இருக்கும் ஆளும் கட்சியினர் வாக்காளர்களை கவரும் நோக்கத்தில் எவ்வித புதிய திட்டங்கள் அல்லது சலுகைகள் அல்லது மான்யங்கள் ஆகியவற்றை அறிவிக்கவோ, அதற்கான வாக்குறுதிகள் அளிக்கவோ, அடிக்கல் நாட்டவோ கூடாது.

(ii) மேற்படி கட்டுப்பாடுகள் புதிய திட்டங்களுக்கும் நடைமுறையிலுள்ள திட்டங்களுக்கும் பொருந்தும். ஆனால் நடைமுறையிலுள்ள முடிவு பெறும்தருவாயில் உள்ள திட்டங்களை, பொது மக்கள் நலன் கருதி, நிறுத்தவோ அல்லது தாமதப்படுத்தவோ கூடாது.

(iii) தேர்தல் நடைபெறவுள்ள பகுதிகளில் நலத் திட்டங்கள் மற்றும் பணிகளுக்காக புதிதாக நிதி ஒதுக்கீடு செய்து வழங்குதல், வேலைகளுக்கான ஒப்பந்தங்கள் அனுமதிப்பது ஆகியவை தடை செய்யப்படுகின்றன. இருப்பினும் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்ட திட்டப் பணிகளுக்கு நிதித்துறையின் ஒப்புதலுடன், வரையறுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை கடைபிடித்து, நிதி ஒதுக்கீடு செய்வதற்கு தடையேதுமில்லை.

(iv) அமைச்சர்கள் உள்ளிட்ட அரசியல் நிர்வாகிகள் எவரும் நடைமுறையிலுள்ள பயனளிப்புத் திட்டங்கள் (Beneficiary Oriented Scheme) குறித்து ஆய்வு மேற்கொள்வதை தேர்தல் முடிவடையும் வரை நிறுத்தி வைக்க வேண்டும்.

(v) திட்டப்பணிகள் துவக்கப்படாத நிலையில், ஏற்கனவே பணியாணைகள் வழங்கப்பட்ட நேர்விலும், பணிகள் எவையும் ஆரம்பிக்கப்பட கூடாது, தேர்தல் முடிவு பெற்றப் பின்னரே திட்டப்பணிகள் தொடங்கப்பட வேண்டும்.

(vi) ஏற்கனவே உரிய அனுமதிகள் பெற்று நடை முறையிலுள்ள திட்டப் பணிகளைத் தொடரலாம்.

(vii) மாதிரி நன்னடத்தை விதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே பயனாளிகள் கண்டறியப்பட்டு நடைமுறையிலுள்ள பயனளிப்புத் திட்டங்களைத் (Beneficiaary Projects) தொடரலாம்.

## X. பதவியில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகள் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள்

45. மாதிரி நன்னடத்தை விதிகள் நடைமுறையில் இருக்கும்போது

(i) பதவியில் இருக்கும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் தங்கள் பதவியின் அதிகாரத்தை தேர்தல் பிரசாரத்திற்கு பயன்படுத்துகிறார்கள் என்று எவ்வித புகாரும் எழாத வகையில் பிரதிநிதிகள் செயற்பட வேண்டும்,

(ii) உள்ளாட்சிக் கட்டிடங்கள் / அறைகள் / அலுவலகங்கள் எதையும் தலைவர்/ உறுப்பினர்/கட்சிப் பிரமுகர்கள் உட்பட்ட எந்த அரசியல் கட்சிகளாலும் அரசியல் சார்ந்த பணிகளுக்காக பயன்படுத்தப்படக் கூடாது.

(iii) வறட்சி/ வெள்ள நிவாரண நடவடிக்கைகள் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் போன்ற அவசர கால நடவடிக்கைகள் குறித்து கலந்தாலோசிக்கும் பொருட்டு மட்டுமே ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி மன்றக் கூட்டங்கள் கூட்டப்பெற வேண்டும். இவை தவிர்த்து மன்றக் கூட்டங்கள் நடைபெற கூடாது.

(iv) மாதிரி நன்னடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்தவுடனேயே சாதாரணத் தேர்தலின் போது உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் அலுவலக ஊர்திகள் அனைத்தும் மாவட்ட அலுவலரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். தற்செயல் தேர்தல்களின் போது உள்ளாட்சி பிரதிநிதிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஊர்திகளை மாதிரி நன்னடத்தை விதிகள் நடைமுறையில் உள்ள பகுதிகளில் பயன்படுத்த முற்றிலும் தடை செய்யப்படுகிறது.

## XI. தேர்தல் பார்வையாளர்கள் :

46. தேர்தல் நடத்துவது தொடர்பாக வேட்பாளர்களுக்கு அல்லது அவர்களது முகவர்களுக்குக் குறிப்பிடத்தக்க புகார் அல்லது பிரச்சினை எதுவுமிருந்தால் அவர்கள் அவற்றை தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட தேர்தல் பார்வையாளர்களிடம் தெரிவிக்கலாம்.

## XII. தண்டனைகள் :

47. இந்த நடத்தை விதிகளை மீறுபவர்கள் பல்வேறு சட்டத்தின் கீழ் தண்டனைக்குள்ளாவார்கள்.

48. அரசியல் கட்சியோ அல்லது அதன் வேட்பாளரோ இந்த நடத்தை விதிகளை மீறியதன் பொருட்டு தண்டனைக்குள்ளாகும் நிலையில், அந்த அரசியல் கட்சியின் மீது நடப்பிலுள்ள தமிழ்நாடு உள்ளாட்சித் தேர்தல் சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் பங்கீடு) ஆணைகளிலுள்ள விதிமுறைகளின்படி, நடவடிக்கை எடுக்க நேரிடும்.

49. இந்த நடத்தை விதிகளை மீறுபவர்கள் மீது, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு தகவல் தெரிவித்து விட்டு மாநிலத் தேர்தல் அலுவலர், மாவட்டத் தேர்தல் அலுவலர், தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் காவல் துறையினர் ஆகியோர் உரிய குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்கு தொடர அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளார்கள்.

காவல்துறையினர், அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள், மாவட்டத் தேர்தல் அலுவலர்கள்/ தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் வேட்பாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களில் பின்பற்றுவதற்குரிய மாதிரி நன்னடத்தை விதிகள் இணைப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**(தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய ஆணைப்படி)**